முருகனைப் போன்று அதிகச் செலவு செய்கின்றவர்கள் கடன் வாங்காமல் வாழ வழி செய்கிறது. திருமணம் செய்து கொண்ட பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு அப்படி இருக்கிறார்கள் என்றால் அவர்கள் ஏறத்தாழ அந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்குத் தேன்நிலவு நடத்திக்கொண்டிருக்கலாம். எனவே அந்த மகிழ்ச் சிக்கு விலை கிடையாது.

திரு. மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, குடும்ப நலத் திட்டத்தை எதிர்க் கக்கூடிய கட்சிகள் தமிழ்நாட்டில் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கட்சி அடிப் படையில் இதற்கு எதிர்ப்பு இல்லை. ஆனால் அரசாங்கம் இதைச் செய்கிறதே, வெற்றிபெறுகிறதே என்பதால் கசப்புணர்ச்சி சில பேர்களுக்கு இருக்கிறது.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, கிறிஸ்துவப் பெரு மக்கள் தலைவரான போப் ஆண்டவர் அண்மையில், எந்த நாட்டிலும் கிறிஸ்தவப் பெருமக்கள் அந்த நாட்டினுடைய நல்ல திட்டங்களையெல்லாம் ஆதரிக்க வேண்டுமென்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். குடும்ப நலத் திட்டமாக இருந்தாலும் ஆதரவு தெரிவிக்க வேண்டுமென்று அறிக்கை விட் டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படி ஒரு அறிக்கை இருந்தால் அதைத் தமிழக அரசு மகிழ்வோடு வரவேற்கும்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசானாலும், மாநில அரசானாலும் குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொண் டிருக்கின்றபொழுது 16 குழந்தைகள் பெற்றால் பரிசு கொடுப்போம் என்று கூறு கிறார்களே, அவர்கள் மேல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த அரசு இத்திட்டத்தை பிரசாரம் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் அப்படியொரு பிரச்சாரம் நாட்டில் இருந்தது. ஆனால் இந்த அரசு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட தற்குப் பிறகு அந்தப் பிரச்சாரம் நின்று போய்விட்டிருக்கிறது.

கால்நடைத் துறை மண்டலப் பிரிவு

* 34. வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இப்பொழுது வேலூரை மையமாகக் கொண்டுள்ள கால்நடைத் துறை மண்டலப் பிரிவைச் செங்கற்பட்டு மாவட்டம், சென்னை மாவட்டம் இரண்டை யும் ஒரு தனி மண்டலமாகவும், வடஆர்க்காடு மாவட்டம், தருமபுரி மாவட்டம்

1972 ஆகஸ்ட் 10]

இரண்டையும் ஒரு தனி மண்டலமாகவும் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை. எனினும் செங்கற்பட்டு மாவட்டத்தை மையமாகக் கொண்டு ஒரு தனி மண்டலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. தேசிய நெருக்கடி நிலைமை காரணமாக மேற்படி செயற்குறிப்பு புதிய செலவினத்தை ஏற்க முடியாத காரணத்தால் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, வேலூர் மண்டல இயக்குநர் ஒரு நாள் ஹோசூருக்குச் சென்று மறுநாள் எண்ணூருக்கு வரவேண்டியிருக்கிறது. இதன் காரணத்தினால் செங்கற்பட்டு மாவட்டமும் கோயம்புத்தூர் மாவட்டத்தைப் போல் முன்னேற முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்த ஆண்டாவது சென்னை மாவட்டத்திற்கும் செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் சேர்த்து ஒரு மண்டல இயக்குநரை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் ஒரு மண்டலம் என்பது ஹோசூர் முதல் எண்ணூர் வரை இருக்கிறது. அதைப் போன்று கோவை மண்டலத்தை எடுத்துக் கொண்டால் உதகையிலிருந்து சேலம் மாவட்டத்திலுள்ள நாமகிரிப்பேட்டை வரையில் வரவேண்டியிருக்கிறது. ஆங்காங்கு நடைபெறுகின்ற பணிகள் செம்மையாக நடைபெறுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்வதற்காகத்தான் துணை டைரக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் நாட்டின் பொருளாதார நிலைமை உயர்கிறபோது மேலும் இது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, though the bifurcation proposals are deferred for the present, when the Government actually takes up the proposals, may I know from the Hon. Minister whether they will select Hosur for the North Arcot and Dharmapuri Region?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, we have got a Farm in Hosur under proper supervision of a Farm Superintendent and the Hosur Farm is serving as Headquarters indirectly. But the headquarters of the Deputy Director need not be placed there.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்னால் கால்நடை இலாக்கா ரீ-ஆர்கனைசேஷன் செய்யப்பட்டது. அதில் சில குறைபாடுகள் இருப்பது சர்க்காருக்கு தெரியுமா? அவற்றை நிவர்த்தி செய்ய அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, குறைபாடுகள் சில இருக்கின்றன என்பது உண்மை. ஆனாலும் வளர்ச்சிக்கான திட்டங்கள் விரிவடையும் பொழுது இந்தக் குறைபாடுகளை மாற்றும் ஆற்றல் அந்தந்த அமைப்புகளுக்கு ஏற்படும். எனவேதான் வளர்ச்சித் திட்டங்களில் கவனம் செலுத்துகிறோம். வளர்ச்சி ஏற்பட ஏற்பட குறைபாடுகள் குறைவதற்கு வழி காண முடியும்.

ஆடு வளர்ப்புப் பண்ணைகள்.

*35. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது உள்ள அரசு சார்புடைய ஆடு வளர்ப்புப் பண்ணைகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நான்கு ஆடு வளர்ப்புப் பண்ணைகள் தமிழகத்தில் உள்ளன.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த ஆடு வளர்ப்புப் பண்ணைகள் லாபத்தில் நடக்கின்றனவா அல்லது நஷ்டத்தில் நடக்கின்றனவா என்று அறிவிப்பதுடன், அப்படி அரசு சார்பில் நடத்தும் இந்த ஆடு வளர்ப்புப் பண்ணைகள் இருந்தாலும், தனியார்களுக்கும், விவசாயிகளுக்கும் தனிப்பட்ட முறையில் உதவி செய்து ஆடு வளர்ப்புத் திட்டத்தை அமல்படுத்தி நல்ல முறையில் செயல்படுத்துமா ? அவர்களுக்கு மானிய உதவி, கடன் உதவி செய்து ஆடு வளர்ப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்வதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பண்ணைகள் நடத்துவது என்பது வியாபார நோக்கத்தோடு இருக்கக் கூடாது என்பது அகில இந்தியாவில் கால்நடைத் துறையால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. தனியார் வளர்க்கும் ஆடுகளின் தரத்தை மேம்படுத்தவும், தேவையான பொலியாடுகளை வளர்க்கவும், சின்ன சேலத்திலும், முகவை மாவட்டம் சாத்தூரிலும், செங்கற்பட்டு மாவட்டம் காட்டுப்பாக்கத்திலும், நீலகிரி மாவட்டம் சந்தியநல்லாவிலும் ஆட்டுப் பண்ணைகள் நடக்கின்றன. இன்றைக்கு விவசாயிகள் ஆடு வளர்க்க விரும்பினால் கூட்டுறவு முறையில் பண்ணை ஏற்படுத்த உதவி செய்யப்படுகிறது. இப்படி எந்த அளவிற்குப் பொதுமக்கள் பயன்படுத்துகிறார்களோ அந்த அளவிற்குச் செய்யப்படுகிறது.